26.09.2025.

<u>கூடுதல் மாவட்ட அமர்வு நீதிமன்றம் (விரைவு நீதிமன்றம் )</u>

<u>விழுப்புரம்</u>

<u>அமர்வு வழக்கு எண். 136/2024</u>

அ.சா.1

| | | | |
|---|---|---|---|
| பெயர் | ரமேஷ் | | |
| த/பெ | கிருஷ்ணன் | | |
| கிராமம் | தும்பூர் தாங்கல் | தொழில் | பிளம்பர் |
| தாலுக்கா | விக்கிரவாண்டி | வயது | 48/2025 |
| மாவட்டம் | விழுப்புரம் | தேதி | 26.09.2025 |

இன்று உதவியாளர் அவர்களால் சத்திய பிராமணம் செய்யவிக்கப்பட்டு விசாரிக்கப்படுகிறார்.

**<u>முதல் விசாரணை</u>**

நான் தற்போது மேற்படி விலாசத்தில் வசித்து வருகிறேன். நான் தற்போது சென்னையில் பிளம்பர் தொழில் செய்து வருகிறேன். இந்த வழக்கில் இறந்துபோன சுரேஷ் என் தம்பி ஆவார். ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியும். சுமார் 2 வருடங்களுக்கு முன்பு இரவு வீட்டில் தூங்கி கொண்டிருந்த போது என் தம்பி தலையில் வலி இருப்பதாக சொன்னதன் பேரில் நானும் என் அப்பா கிருஷ்ணனும், என் தம்பி சுரேஷ் விழுப்புரம் முண்டியம்பாக்கம் அரசு மருத்துவமனையில் கொண்டு சேர்த்தேன். தலையில் வலி இருப்பது சம்பந்தமாக அவரிடம் கேட்க அவர் எதுவும் என்னிடம் சொல்லவில்லை. இருந்தும் நான் அவருடன் மருத்துவமனையில் இருந்த போது கெடார் காவல் நிலைய போலீசார் என்னிடம் எழுதாத வெள்ளை தாளில் கையொப்பம் பெற்று சென்றார்கள். என்னிடம் காட்டப்படும் புகார் வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான். அது அ.சா.ஆ.1 ஆகும். இதற்கு முன்பு எங்களுக்கும், வேறு யாருக்கும் முன் விரோதம் எதுவும் இல்லை. வேறு எந்த

சம்பவமும் நடைபெறவில்லை. அதன் பிறகு மருத்துவமனையில் சிகிச்சையில் இருந்த எனது தம்பி 2 நாட்கள் கழித்து மருத்துவமனையில் இறந்துவிட்டார். அவரது பிரேதத்தை பெற்று முறையாக இறுதி சடங்குகள் செய்தோம். இது சம்பந்தமாக போலீசார் அதன்பிறகும் என்னை விசாரணை செய்யவில்லை.

<u>(சாட்சியை பிறழ் சாட்சியாக கருதி குறுக்கு விசாரணை செய்ய அரசு தரப்பில் அனுமதிகோரி அனுமதி வழங்கப்பட்டது.</u>

<u>அரசு தரப்பு குறுக்கு விசாரணை:-</u>

எங்களுக்கும், என் மாமன் மகன்களான எதிரிகளுக்கும், வீடு கட்டி கொடுப்பது சம்பந்தமாக முன்விரோதம் இருந்தது என்றும், அதை மனதில் வைத்துக் கொண்டு கடந்த 01/10/2021 அன்று மாலை 4.00 மணியளவில் நான் முரளி என்பவரின் வீட்டின் எதிரில் சென்றேன் என்றும், அப்போது ஜெயக்குமாரும், செல்வகுமாரும் தகராறு செய்தார்கள் என்றும், ஜெயக்குமார் எனது வயிற்றில் கடித்துவிட்டார் என்றும், அதைக் கேட்க வந்த என் தம்பி சுரேஷை இருவரும் சேர்ந்து தாக்கினார்கள் என்றும், பின்பு செல்வகுமார் கீழே கிடந்த ரப்பர் ஓஸ் பைப்பை எடுத்து என் தம்பி சுரேஷின் பின்தலையில் அடித்துவிட்டார் என்றும், பின் அக்கம் பக்கத்தில் உள்ளவர்கள் மறித்து விட்டதால் நாங்கள் வீட்டிற்கு சென்று விட்டோம் என்றும், அன்று இரவு (02/10/2023 அதிகாலை 3.00 மணியளவில்) என் தம்பி தலையில் வலி இருப்பதாக கூறியதன் பேரில், அவரை முண்டியம்பாக்கம் அழைத்து சென்று நானும் எனது அப்பாவும் சேர்த்தோம் என்றும், அவர் சிகிச்சையில் இருந்தார் என்றும், அப்போது உடன் இருந்த என்னிடம் கெடார் காவல் நிலைய உதவி ஆய்வாளர் அவர்கள், இந்த சம்பவம் குறித்து என்னிடம் வாக்குமூலம் பெற்றார்கள் என்றும், அந்த புகார் வாக்குமூலத்தில் என்னிடம் கையொப்பம் பெற்றார்கள் என்றும், இது சம்பந்தமாக என்னை போலீசார் விசாரணை செய்தார்கள் என்றும், அப்போது நடந்தவைகளை சொல்லிக் கொண்டேன் என்றும், பின்பு 03/10/2023 ம் தேதி காலை 10-15 மணியளவில் என் தம்பி சுரேஷ் சிகிச்சை பலனின்றி அதே மருத்துவமனையில் இறந்துவிட்டார் என்றும், இது சம்பந்தமாக என்னை போலீசார் விசாரணை செய்தார்கள் என்றும், தற்போது எதிரிகள் கேட்டுக் கொண்டதன் பேரில் உண்மையை மறைத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u>**

சுரேஷ் கட்டிட வேலை செய்யும் கொத்தனார் என்றும், நான் கட்டிட வேலை செய்யும் பிளம்பர் என்றும் சொன்னால் சரிதான். சுரேஷ் கட்டிட வேலை செய்வதற்காக சாரம் கட்டுவது, பொருட்களை தலையில் சுமந்து மேலே ஏற்றி செல்வது போன்ற அனைத்து வேலைகளையும் செய்வார் என்றால் சரிதான். சாரம் கட்டும் போது சில நேரங்களில் தவறி, குச்சி, கழி தலையில் விழுவது சகஜம் என்று சொன்னால் சரிதான். சுரேஷுக்கு எதனால் அந்த தலைவலி வந்தது என்று எனக்கு தெரியாது. நான் மருத்துவமனைக்கு கொண்டு செல்லும்போது சுரேஷ் பேசும் நிலைமையில் இல்லை என்று சொன்னால் சரிதான். போலீசார் வந்து பார்க்கும்போதும் சுரேஷ் பேசும் நிலைமையில் இல்லை என்று சொன்னால் சரிதான். மரணம் எதனால் ஏற்பட்டது என்ற விவரம் எனக்கு தெரியாது என்றால் சரிதான்.

**<u>மறுவிசாரணை</u>**

**<u>இல்லை</u>**